அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief
Dr PRIYAKRISHNAN

Publisher
MR P. JAYAKRISHNAN

Editorial Board Members
Dr V SELVAKUMAR
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya
Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy
Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

ஆற்றுப்படைகளில் விருந்தோம்பல் பண்பு

சே.அனிதா

(Reg.No.BDU2210632780188) முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழாய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 022, தமிழ்நாடு.

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

முனைவர் தி.ஆறுமுகம்

இணைப் பேராசிரியர் - ஆய்வு நெறியாளர்,

தமிழாய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 022, தமிழ்நாடு.

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

Abstract

Hospitality stands as the foremost and most distinguished cultural virtue of the Tamil people. Food is essential for survival; among the three basic human needs-food, clothing, and shelter-food holds the primary place. Hospitality is the hallmark of a virtuous domestic life. Therefore, one should cherish the virtue of hospitality and aspire to live according to the ethical codes of our ancestors. A household that upholds hospitality is truly righteous. The ideal domestic life involves honoring and seeing off guests who are kinsmen, while also welcoming and feeding unexpected guests-even those of high stature-before partaking in the meal oneself.

A meal consumed without a guest is merely sustenance (akin to medicine). Tradition holds that acts of charity and benevolence protect one's life. The noble virtue of sharing food with others is widely celebrated in Tamil history and literature. Ancient Tamils upheld cultural values even in the act of eating. It is evident that this culture must be preserved and safeguarded without erosion.

Keywords: *Battlefield, Kalingathupparani, Elephant corps, Ploughing field, Male elephant (Kaliru)*

ஆய்வுச் சுருக்கம்

தமிழரின் பண்பாட்டுச் சிறப்புகளில் முதன்மையானதும், சிறப்பானதும், தலைசிறந்ததும் 'விருந்தோம்பல்' ஆகும். மக்கள் உயிர்வாழ உணவு இன்றியமையாதது. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றில் முதல் இடம் பிடிப்பது உணவே ஆகும். ஒவ்வொருவருடைய இல்வாழ்க்கையின் சிறப்பே விருந்தோம்பல்தான். எனவே விருந்தோம்பல் பண்பை போற்றி முன்னோர்களின் வாழ்க்கை நெறிப்படி வாழ்வதையே

இலட்சியமாகக் கொள்ள வேண்டும். விருந்தோம்பலைப் போற்றும் இல்லறமே நல்லறமாகும். சுற்றத்தினராய் வந்த வீருந்தினர்க்கு மரியாதை செய்து அனுப்பி மேலும் இன்னும் பெரியோர் எங்கே என்று வருவிருந்தினரை எதிர்த்து உண்பதே சிறந்த இல்லறமாகும்.

விருந்து இல்லாது உண்ணுகின்ற உணவு மருந்தாகும். தானமும், தர்மமும் தலைகாக்கும் என்பது மரபு. அடுத்தவர்க்கும் உணவளிக்கும் உயரிய மாண்பு தமிழர் வரலாற்றில் இலக்கியங்களில் பெரிதும் பேசப்படுகிறது. உண்ணுகின்ற உணவிலும் பண்பாட்டைக் கடைப்பிடித்தவர்கள் பழந்தமிழர்கள் ஆவார். அத்தகைய பண்பாட்டைச் சீர்குலையாமல் பேணி காக்க வேண்டும் என்பதை உணரமுடிகிறது.

கருவிச் சொற்கள் *(Keywords):* போர்க்களம், கலிங்கத்துப்பரணி, யானைப்படை, ஏர்க்களம், களிறு

முன்னுரை

ஆற்றுப்படை என்பது ஆறு + படை எனப் பிரிக்கப்பட்டது. ஆறு - நெறி; வழி; வழிப்படுத்துதல் — வழிவழியாக நடந்து செல்லுமாறு கூறுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. வளஞ்சிறந்த வள்ளல் ஒருவனிடம் பரிசில் பெற்று வரும் கலைஞன், எதிரே பசியால் இளைத்து நடைமெலிந்து வரும் ஒருவனைக் கண்டு தான்பெற்ற பெருவளத்தை இன்னாரிடம் பெற்றேன், நீயும் சென்றால் பெறலாம் எனக் கூறி ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படையாகும். பத்துப்பாட்டில் செம்பாதி ஆற்றுப்படை நூல்களாகும். அதுபோலவே சிற்றிலக்கியங்கள் கூறும் தொண்ணூற்றாறு வகைகளில் ஒன்றாகவும் ஆற்றுப்படை நூல் விளங்குகிறது. பகிர்ந்து உண்டு பல்லுயிர் ஓம்புவோம் என்ற கோட்பாட்டைத் தமிழன் பேச்சளவில் அன்றி வாழ்க்கையில் பின்பற்றி செயல்படுத்தியவன் ஆவான். தான்பெற்ற செல்வத்தைப் பிறரது பசியைத் தீர்க்கக் கொடுத்து உதவும் ஈகையையும் காண்கையில் இவர்கள் வள்ளல்களை விட ஒரு வகையில் மேலும் உயர்ந்தவர்கள். மேன்மை மிக்கவர்கள் என்ற எண்ணத்தை எழச் செய்கிறது. அந்த வகையில் ஆற்றுப்படை வலியுறுத்தும் விருந்தோம்பல் சிந்தனைகளை விளக்க முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

விருந்தோம்பலின் சிறப்பு

விருந்து என்னும் சொல் இன்றும் வாழ்ந்து வரும் பழந்தமிழ்ச் சொல்லாகும். தூயதாய் விளங்கும் விருந்து என்னும் சொல்லுக்குப் புதுமை, புதியதாய் வந்தவர்க்கு உணவு வழங்குதல் என்னும் பொருட்களைத் தமிழ்மொழி அகராதி எடுத்துரைக்கிறது. விரும்பி வருவதாலும் விரும்பி ஏற்றுக் கொள்வதாலும் விருந்து என்பது காரணப் பெயர் என்பர். விருந்து என்னும் சொல்லைத் தொல்காப்பியர் புதுமை என்னும் பொருளில் வழங்குகிறார். முன்னோர் சென்ற

வழியில் செல்லாது புதுமையான யாப்பு வகை கொண்டு பாடுதலை விருந்து எனக் குறிப்பிடுகிறார். எண்வகை வனப்பினுள் விருந்து என்பது ஒன்றாகும். இதனைத் தொல்காப்பியர்,

விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே (தொல்.1495)

என்னும் செய்யுளியல் நூற்பா வழி எடுத்துரைக்கிறார். இதனை,

இன்உயிர் செய்யும் மருந்தாகி, பின்னிய

காதலர் — எயிறு ஏய்க்கும் தன் அருவி நறுமுல்லைப்

போது ஆரக் கொள்ளும் கமல் குரற்கு என்னும்

தூது வந்ததென்றே, தோழி

துயர் அறு கிளவியோடு அயர்ந்தீகம் விருந்தே (கலித்தொகை, பா.32)

என்ற பாடலில், நம் இனிய உயிரை வாழ்விக்கும் மருந்தினைப் போல, உன்னுடைய துயர்தீர்க்கும் இனிய மருந்து நம் காதலருடைய வருகை. அதைத் தெரிவிக்கும் பொருட்டு இளவேனில் வந்திருக்கின்றது. ஆதலால் அக்காலத்திற்கு விருந்தானவற்றைச் செய்வோம் என்றுரைக்கும் தோழிக்கூற்று, தமிழர் பண்பாட்டின் சிறப்பை எடுத்துரைக்கின்றது.

இல்வாழ்க்கையின் உயிர்நாடி. விருந்தினர் என்பவர் உறவினர்கள் மட்டுமின்றி, புதியவர் முன்பின் அறியாதவர், ஏழைகள், ஊர்விட்டு ஊர் வந்தவர்கள் போன்றோரும் விருந்தினர் எனப்படுவர். விருந்தோம்பலின் சிறப்பினை உணர்ந்த பண்டைத் தமிழர்கள் தங்கள் இல்வாழ்க்கைக் கடமைகளுள் விருந்தோம்பலை இன்றியமையாத, ஒரு பண்பாகக் கொண்டிருந்தனர். இதனை,

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள்.81)

எனும் குறளின் மூலம் அறியமுடிகிறது.

ஆறறிவு உயிர்களுக்கு மட்டுமல்லாது தனக்கு உதவி செய்தவரை மறக்காது, நன்றி மறவா உள்ளத்தோடு விருந்து படைப்பது தமிழர் வழக்கம். பொருள்தேடச் சென்ற காதலரிடமிருந்து தூதுவராய் இளவேனில் வந்திருக்கிறது. இளவேனில் காலம் பொருள்தேட உகந்ததன்று. எனவே தலைவன் வரும் செய்தியோடு வந்த இளவேனிலுக்கு நாம் விருந்து வைப்போம் என்கிறாள் தோழி. விருந்தினரை எதிர்கொள்ளும் பொழுதும், விடை கொடுத்து அனுப்பும் பொழுதும் அவருடன் சேர்ந்து ஏழு அடி நடந்து விருந்திரைச் சிறப்பிப்பது, சங்ககாலச் சமுதாயத்தில் நடைமுறையில் இருந்தது. சோழன் கரிகால் பெருவளத்தான் தான் மன்னனாக இருந்தும், தன்னை நாடி வரும். பொருநர் இரவலராக இருந்தாலும் அவர்களைப் பெரிதும் மதித்தான். அவர்களுக்கு வேண்டிய சிறப்புகள் செய்தான். பொருநரை வழி அனுப்பும் போது நான்கு

குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி தன் காலால் நடந்து சென்று வழியனுப்பினான். இதனை,

காலில் ஏழடிப் பின்சென்று கோலின்

தாறுகளைந் தேறென் றேற்றி வீறுபெறு

பேரியாழ் முறையுழிக் கழிப்பி நீர்வாய்த்

தண்பணை தழீஇய தளரா விருக்கை (பொருந.166)

என்று பாடலடிகளின்வழி அறியமுடிகிறது.

விருந்தினரை உபசரிக்கும் முறை

விருந்தினரைப் பாதுகாத்தலும், சுற்றத்தாரைப் பாதுகாத்தலும் தலைவியின் பண்புகளாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதனை,

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்னை கிழவோன் மாண்புகள் (தொல்.1102)

என்ற நூற்பாவின் வழி அறியமுடிகிறது.

விளையாட்டின் மூலம் சிறுவயது முதலே தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விருந்தோம்பல் பண்பை ஊட்டி வளர்த்ததை,

தொடலை ஆயவொடு கடல் உடன்ஆடியும்

சிற்றில் இழைத்தும் சிறுசோறு . . . (அகம்.10)

இப்பாடல் மூலம் உணரமுடிகிறது.

மணிமேகலையில் உணவின் முதன்மையைப் பற்றிக் கூறும்போது,

அறம் எனப்படுவது யாது எனக்கேட்பின்

மறவாது இதுகேள் மண் உயிர்க்கு எல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும்

அல்லது கண்டது இல் (மணிமேகலை, 288-291)

பசித்திருப்பவரை நாடி, தேடிச்சென்று பசியாற்றுவதே தர்மம் என்று மணிமேகலை கூறுகிறது. இவ்வாறு காப்பியங்களில் விருந்தோம்பலின் பண்பு விஞ்சி நிற்பதை அறியமுடிகிறது.

மலைகளில் வாழும் குறவர்கள் வரும் விருந்தினர்களை மகிழ்வுடன் வரவேற்று, தாம் சமைத்த மாமிசத்தையும், தினையரிசிச் சோற்றையம் அனைவரும் ஒன்றாக உண்ணுவார்கள். பலநாள் உறவுடையவர் போன்று புதியவர்களையும் ஏற்றுக் கொள்வர் என்பதை,

நும் இல் போல கேளாது கெழீஇ

சேட் புலம்பு அகல இனிய கூறி

குரூஉக்கண் இறடிப்பொம்மல் பெறுகுவீர் (கூத்தராற்றுப்படை, 167-169)

தாம் உண்ணும் உணவினை எவ்விதத் தயக்கமுமின்றி வரும் விருந்தினர்க்கு உபசரித்து மகிழும் பண்பினை மலைபடுகடாம் மூலம் உணரமுடிகிறது.

ஆற்றுப்படையில் விருந்தோம்பல்

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிர்ச் சொன்ன பக்கமும்

என்று ஆற்றுப்படைக்குத் தொல்காப்பியர் இலக்கணம் கூறுகிறார். கரிகாலன் உணவு முதலியவை தந்து பேணிய முறையைப் பொருநன் எடுத்துரைக்கின்றான். தக்க காலத்தை உணர்ந்து எம்மை அழைத்து சூடாக செய்த இறைச்சியாகிய பெருந்தசைத் துண்டங்களைப் பலமுறை உண்ணுங்கள் என்று எம்மை வற்புறுத்தித் தந்தனன். அவற்றின் வெப்பத்தை ஆற்றுதற்பொருட்டு வாயின் இடப்பக்கத்தும் வலப்பக்கத்தும் மாற்றி மாற்றிச் சேர்த்துத் தின்று இனி இவை எமக்கு வேண்டாம் என்று கூறுகையில் இனிய சுவையை உடைய பண்ணியாரங்களைக் கொணர்ந்து தந்து அவற்றை உண்ணச் செய்தனர் என்பதை,

. . . . பதன் அறிந்து
துராஅய் துற்றிய துருவை அம் புழுக்கின்
பராஅரை வேவை பருகு எனத் தண்டிக்
காழின் கட்ட கோழ் ஊன் கொழுங்குறை
ஊழின் ஊழின் வாய்து வெய்து ஒற்றி
அவை அவை முனிவகும் எனினே சுவைய
வேறுபல் ஊருவின் விரகு தந்து இரீஇ (பொருநராற்றுப்படை, 102-108)

எனப் பொருநன் கரிகாலனின் சிறப்பைக் கூறுகின்றான்.

நல்லியக்கோடனின் ஆட்சிக்குட்பட்ட நெய்தல் நிலத்தில் வாழும் மகளிர் களிப்பு மிகத்தரும் பழைய கள்தெளிவைத் தம் இனப்பரதவரிடம் கொடுப்பர். பின்பு வறுத்த சூடான குழல்மீனின் சூட்டிறைச்சியைக் கொடுத்து உண்ணச் செய்வர். இச்செய்தியை,

நுதிவேல் நோக்கில் நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்
தளை அவிழ் தெரியல் தகையோற் பாடி
அறல் குழல் பாணி தூங்கியவரோடு
வறல்குழல் சூட்டின் வயின்வயின் பெறுகுவீர் (சிறுபாண்.158-163)

என்னும் பாடலடியின் வழி அறியலாம்.

விருந்து அளிக்கும் சிறப்பை விட அவர்களை அருகில் இருந்து தானே உண்ணச் செய்யும் பண்புப் போற்றுதலுக்குரியது. தன் பிள்ளைகளின் முகம் பார்த்து ஊட்டும் ஒரு தாயைப் போல தொண்டைமான் இளந்திரையன் பாணர்களுக்கு மரபு பிறழாது, பொன் கலத்தில் விண்மீன்களைக் கொட்டியது போல வெண்சோறிட்டுப் பெரிய விருப்பத்துடன் தானே முன்னின்று உடனிருந்து உணவு கொடுத்து மகிழ்ந்ததை,

விருப்புடை மரபின் கரப்புடை அடிசில்

மீன் பூத்தன்ன வான் கலம் பரப்பி

மகமுறை மகமுறை நோக்கி முகன்அமர்ந்து

ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி (பெரும்பாண்.476-479)

என்ற அடிகளால் அறியலாம்.

இரவலர் கொடை வள்ளல் ஒருவரைக் காணும் போது உண்டாகும் இன்பத்தை விட இரவலரைக் கண்டபோது கொடை வள்ளலுக்கு உண்டாகும் இன்பம் பெரிது. இத்தகைய உள்ளப் பண்பு நன்னனுக்கு இருந்தது. தன்னை நோக்கி வருபவர்களுக்கு ஆடைகளைத் தந்து, பல நாட்கள் தங்கியிருக்கச் செய்து நாள்தோறும் நல்ல விருந்தை உபசரிக்கும் தன்மை உடையவன் என்பதை,

இழை மருங்கு அறியா நுழை நூற் கலிங்கம்

எள்அறு சிறப்பின் வெள்அரைக் கொளீஇ

முடுவல் தந்த பைந் நிணத் தடியொடு

நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது

தலை நாள் அன்ன புகலொடு வழி சிறந்து

பல நாள் நிற்பினும் பெறுகுவிர் நில்லாது (கூத்தராற்றுப்படை.561-566)

என்ற அடிகளின் வழி முதல் நாள் அளித்த விருந்து, விருந்தினரைப் போற்றிய முறையை பல நாட்கள் தங்கியிருந்தாலும் விருப்பம் குறையாமல் செய்யப்பட்ட முறையை அறியமுடிகின்றது.

முடிவுரை

விருந்தோம்பல் நமது பண்பாட்டின் அடையாளமாக குழந்தைப் பருவத்திலிருந்தே பழக்கப்படுத்துவதை இலக்கியங்கள் வாயிலாக உணரமுடிகிறது. உலகில் ஒருவரின் பசியைப் போக்குதலே சிறந்த அறமாகும். உயர்ந்த பண்புகளைக் கொண்ட உயர்ந்தோரை சங்கப் புலவர்கள் பாராட்டிப் பாடும் இயல்பு உடையவர்கள் என்பதை ஆற்றுப்படை நூல்கள் மூலம் அறியமுடிகின்றது.

பண்டைத் தமிழர்களின் வாழ்வில் உணவிற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அதனைப் பகிர்ந்துண்ணும் பண்புநிலை, வருவோர்க்கு இல்லையென்று கூறாமல் வழங்கும் பண்பு போன்றவற்றை ஆற்றுப்படை நூல்களின்வழி மிகத் தெளிவாக அறியமுடிகின்றது.

வாழ்வு முழுமையடைவதே விருந்தோம்பல் பண்பு மூலமாகத்தான். நாம் காலம் காலமாகப் பின்பற்றும் விருந்தோம்பலை நம் சந்ததியரும், நமக்கு அடுத்து வரும் சந்ததியர்களும், விருந்தோம்பலைப் போற்றி, உபசரித்துப் பேண வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம் என்பதை உணரமுடிகிறது.

பார்வை நூல்கள்

இராமசாமி, ஆ.வே., *திருக்குறள் எளிய தெளிவுரையும் பொன்மொழியும்.* ஸ்ரீ பராசக்தி எண்டர்பிரைசஸ், திருச்சிராப்பள்ளி, ஏழாம் பதிப்பு, 2012.

இளம்பூரணர் (உ.ஆ.), *தொல்காப்பியம் (அகத்திணையியல் — புறத்திணையியல்) 1953.* திருநெல்வேலி. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 2014.

கீர்த்தி (உ.ஆ.), *நீதிநூல்கள் (ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, வெற்றி வேற்கை, நல்வழி, மூதுரை, நன்னெறி) மூலமும் உரையும் எளிய தமிழில்.* அருணா பதிப்பகம், சென்னை, இருபதாம் பதிப்பு, 2021

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.). *தொல்காப்பியம் — பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை, பதினான்காம் பதிப்பு, 2016.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.). *ஆசாரக்கோவை மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, ஒன்பதாம் பதிப்பு, 2019/11.

கோபாலகிருஷ்ணமாச்சாரியார், வை.மு. *கம்பராமாயணம் — சுந்தரகாண்டம் மூலமும் உரையும்.* உமா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2005.

சரவணன், ப. (உ.ஆ.). *பொருநராற்றுப்படை.* தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை & தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2024.

சண்முகம் பிள்ளை, மு. (தொ.ஆ.). *தமிழ்-தமிழ்-அகர முதலி* (1985). தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, நான்காம் பதிப்பு, 2022.

சோமசுந்தரனார், பொ.வே., *பத்துப்பாட்டு வரிசை — க: திருமுருகாற்றுப்படை (1955).* திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி, மறுபதிப்பு, 1969.

சோமசுந்தரனார், பொ.வே., *பத்துப்பாட்டு வரிசை — உ: பொருநராற்றுப்படை (1955).* திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி, மறுபதிப்பு, 1970.

தமிழண்ணல். *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்.* செல்லப்பா பதிப்பகம், மதுரை, ஆறாம் பதிப்பு, 2021.

துரைசாமிப் பிள்ளை, ஔவை (உ.ஆ.). *புறநானூறு மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2017.

பரிமணம். அ,மா., *சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி-6.* தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2013:574.

பொற்கோ, *ஆராய்ச்சி நெறிமுறைகள்.* ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, ஏழாம் பதிப்பு, 2016.

முருகன், இரா. (உ.ஆ.). *இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாண் ஆற்றுப்படை.* தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2024.

ராமகிருஷ்ணன், எஸ். (ப.ஆ.). *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்).* க்ரியா, சென்னை, 2018.

வேங்கடசாமி நாட்டார், ந.மு. *இன்னா நாற்பது, இனியவை நாற்பது மூலமும் உரையும்,* சாரதா பதிப்பகம், சென்னை, பன்னிரண்டாம் பதிப்பு, 2020.

வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.). *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்.* (ப.ஆ, எஸ்.கௌமாரீஸ்வரி) ராமையா பதிப்பகம், சென்னை, 2005.

References

Ramasamy, A.V. Thirukkural Eliya Thelivuraiyum Ponmozhiyum. Sri Parasakthi Enterprises, Tiruchirapalli, Seventh Edition, 2012.

Ilampooranar (Ed.). Tholkappiyam (Agathinaiyiyal—Purathinaiyal) 1953. Thirunelveli, Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam Limited, Chennai, Reprint, 2014.

Keerthy (Ed.). Neethinoolkal (Athisudi, Kondraivendan, Ulaganeethi, Vetrivetkai, Nalvazhi, Moothurai, Nanneri) Moolamum Uraiyum Eliya Tamilil. Aruna Pathippagam, Chennai, Twnentieth Edition, 2021

Gowmariswari, S. (Ed.). Tholkappiyam — Porulathikaram. Saratha Pathippagam, Chennai, Fourteenth Edition, 2016.

Gowmariswari, S. (Ed.). *Acharakovai Moolamum Uraiyum.* Saratha Pathippagam, Chennai, Ninth Edition, 2019/11.

Gopalakrishnamachariyar, V.M. *Kambaramayanam — Sundarakandam Moolamum Uraiyum.* Uma Pathippagam, Chennai, First Edition, 2005.

Saravanan, P. (Ed.). *Porunatrupadai.* Tamil Valarchi Thurai, Chennai & Tamilnadu Padanool Matrum Kalviyiyal Panigal Kazhagam, Chennai, Third Edition, 2024.

Shanmugam Pillai, M. (Ed.). *Tamil-Tamil-Agara Muthali* (1985). Tamilnadu Padanool Matrum Kalviyiyal Panigal Kazhagam, Chennai, Fourth Edition, 2022.

Somasundaranar, P.V. *Pathupattu Varisai — Ka: Thirumurugatrupadai (1955).* Thirunelveli Thenninthiya Saivasiddhantha Noorpathippu Kazhagam Limited, Thirunelveli, Reprint, 1969.

Somasundaranar, P.V. *Pathupattu Varisai — U: Porunatrupadai (1955).* Thirunelveli Thenninthiya Saivasiddhantha Noorpathippu Kazhagam Limited, Thirunelveli, Reprint, 1970.

Tamilannal. *Tholkappiyam Moolamum Karuthuraiyum.* Chellappa Pathippagam, Madurai, Sixth Edition, 2021.

Duraisamy Pillai, Avvai (Ed.). *Purananooru Moolamum Uraiyum.* Saratha Pathippagam, Chennai, Second Edition, 2017.

Parimanam. A.M. *Sanga Ilakkiya Porutkalanjiyam, Vol.6.* Tamil University, Thanjavur, First Edition, 2013:574.

Porko. *Aaraaichi Nerimuraigal.* Iynthinai Pathippagam, Chennai, Seventh Edition, 2016.

Murugam, R. (Ed.). *Idaikalinattu Nalloor Nathathanaar Paadiya Sirupan Aatrupadai.* Tamilnadu Paadanool Matrum Kalviyiyal Panikal Kazhagam, Chennai, Third Edition, 2024.

Ramakrishnan, S. (Ed.). *Creyavin Tharkala Tamil Agarathi (Tamil-Tamil-English).* Creya, Chennai, 2018.

Venkadasamy Nattar, N.M. (Ed.) *Inna Narpathu, Iniyavai Narpathu Moolamum Uraiyum.* Saratha Pathippagam, Chennai, Twelfth Edition, 2020.

Venkadasamy Nattar, N.M. (Ed.). *Silappathikaram Moolamum Uraiyum.* Ramayya Pathippagam, Chennai, 2005.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com